**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 151/2022

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுதாகரர் | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | பழனிசாமி | வயது | : 40 |
| கிராமம் | மல்லிகுந்தம் | நாள் | : 10.02.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கிற்கு மூன்றாம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பில் 2 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். (ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை).

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. வாதி சிவா கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி தானபத்திரத்தை ரத்து செய்யுமாறு பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியும், 1ம் பிரதிவாதியும் உறவினர்களா என்றால் இல்லை. தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமான சொத்தாகும். 1ம் பிரதிவாதிக்கு அரவது சொத்து விலைக்கு வாங்கிய சொத்தாகும். ச.எண்.239/1ல் கண்ட சொத்து குறித்து தான் தானபத்திரம் 1ம் பிரதிவாதி BDO அலுவலர் மீது எழுதி வைத்துள்ளார், ஆனால் அந்த சொத்தில் அவருக்கு எந்த உரிமையும் இல்லை.

2) தாவா சொத்தான ச.எண்.239/1ஐ சென்றடைய ஏற்கனவே பஞ்சாயத்து சாலை ஒன்று உள்ளது. மேற்படி பஞ்சாயத்து சாலையானது மல்லிகுந்தம் முருகன் கோவிலிலிருந்து ஆரம்பிக்கிறது. ச.எண்.239/1க்கு வடக்குபுறம் தான் அந்த

பஞ்சாயத்து ரோடு அமைந்துள்ளது. 1ம் பிரதிவாதி தனக்கு உரிமையில்லாத தாவா சொத்து குறித்து தடவழி எழுதி கொடுத்துள்ளதால் அதை ரத்து செய்யவேண்டும் என்று வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பச்சபாளியில் மொத்தம் 3 வீடுகள் மட்டும் தான் உள்ளது. நிலம் மொத்தமாகவே 5 ஏக்கர் தான் இருக்கும். தானபத்திரமானது 2006 ல் தான் எழுதப்பட்டது.

3) 2004 ல் நானும், என் சகோதரர் வாதி சிவாவும் பாகபிரிவினை செய்து கொண்டோம். இந்த வழக்கானது 2022 ல் தாக்கல் செய்யப்பட்டது. தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட விவரம் எங்களுக்கு எப்போது தெரியும் என்றால் 2022 ல் தான் எனக்கும், என் சகோதரர் வாதிக்கும் தெரியும். 2006 ல் எழுதப்பட்ட பத்திரம் குறித்து எங்களுக்கு 2022 ல் தான் தெரியும் என்று நாங்கள் வழக்கு மூலத்திற்காக தவறாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் தானசெட்டில்மெண்ட வாங்கியபிறகு சாலை அமைக்க வந்தபோது கூட நாங்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அது எங்கள் நிலம் என்று கூறி தடுத்துவிட்டோம்.

4) 94 X 3.5 மீட்டர் அகலத்தில் ச.எண்.239/1 ல் பொதுத்தடம் செல்கிறது என்றும், அந்த தடம் கச்சராயனூர் வரை சென்று முடிவடைகிறது என்றால் சரியல்ல. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைத்துதருமாறு மேற்படி பொதுத்தடம் தொடர்பாக 15 நபர்களுக்கு மேல் தானம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் எழுதி கொடுத்தது தாவா சொத்தான ச.எண்.239/1 க்கு நேர்மாறான வேறு இடம் ஆகும். சாலை அமைக்க அரசு அதிகாரிகள் எப்போது வந்தார்கள் என்றால் 2022 ல் தான் வந்தார்கள். இது தொடர்பாக நாங்கள் அரசு அதிகாரிகளிடம் ஏதேனும் மனு கொடுத்தோமா என்றால் கொடுக்கவில்லை.

5) எங்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி விவரம் 2006 லேயே தெரியும் என்றும், அப்போது அதை விட்டு விட்டு தற்போது எங்களுக்குள் ஏற்பட்ட கருத்துவேறுபாடு மற்றும் பிரச்சனை காரணமாக புதியதாக ஒரு வழக்குமூலத்தை பொய்யாக காண்பித்து

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இந்த வழக்கு அதிகபடியான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு பத்திரத்தை பதிவு செய்யவேண்டும் என்றால் இரு தரப்பினர்களும், ஆஜராகி உரிய பதிவு கட்டணம் மற்றும் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகளை பொறுத்தவரை இரு தரப்பினர்களின் பதிவு ஆவணம் சமர்பித்ததன் பேரில் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரியல்ல.

6) 3, 4 பிரதிவாதிகளிடம் இது தொடர்பாக நாங்கள் மனு ஏதேனும் கொடுத்தோமா என்றால் இல்லை. 5ம் பிரதிவாதியான மாவட்ட ஆட்சியரிடம் இந்த பிரச்சனை தொடர்பாக ஏதேனும் மனு கொடுத்தோமா என்றால் இல்லை. அரசுக்கு பொதுமக்கள் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக தானமாக சொத்து வழங்கிவிட்ட பிறகு மீள அரசிடமிருந்து வழிவகை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 25 நபர்கள் தானம் எழுதி கொடுத்துள்ளதால் அதில் என்னுடைய நிலமாக சொல்லப்படும் ஆவணத்தை பொறுத்துமட்டும் ரத்து செய்ய இயலாது என்றால் சரியல்ல. வழக்கானது காலதாமத்திற்காகவும், தவறான சங்கதிகள் குறித்து தாக்கல் செய்ததற்காகவும் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.